ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 459) Jan (1) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)...28

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 424)

6-9-10. குறுகா நீளா இறுதி கூடா எனை ஊழி
சிறுகா பெருகா அளவு இல் இன்பம் சேர்ந்தாலும்
மறு கால் இன்றி மாயோன் உனக்கே ஆளாகும்
சிறு காலத்தை உறுமோ அந்தோ தெரியிலே

பொருள் – ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி சுருங்குதல் மற்றும் மலர்தல் ஆகிய தன்மைகள் இல்லாமலும், முடிவு என்பது இல்லாமலும், அனைத்து காலங்களிலும் குறைதல் மற்றும் பெருகுதல் இல்லாமலும், அளவு என்பது இல்லாமலும் உள்ளதான ஆத்ம ஆனந்தத்தை அடைய நேரிட்டாலும், சிறிதளவு காலம் மட்டுமே உண்டான அனுபவம் கூட எல்லையற்ற மேன்மை கொண்டதாக தோன்றும்படியாக ஒரு அனுபவத்தை உண்டாக்குபவனே! நன்கு ஆராய்ந்து பார்த்தால், மீண்டும் ஒரு காலம் இன்றி உனக்கு மட்டுமே கைங்கர்யம் செய்யும் சிறிய காலத்தை, நீண்ட அந்த ஆத்ம அனுபவம் ஒக்குமோ?

அவதாரிகை – "ஐச்வர்யாதிகள் அல்பாஸ்த்திரங்கள்" என்று "வேண்டா" என்கிறீராகில், அவ்வளவன்றிறே; அநந்தமுமாய் ஸ்த்திரமுமாயிருக்குமிறே ஆத்மாநுபவம்! அத்தை யநுபவித்தாலோ? என்ன, "நீ சொன்னது உபபத்தியாகிற் செய்யலாயிற்று; அவை 'அல்பம், அஸ்த்திரம்' என்றவிடம் ஸ்வரூப கதநம் பண்ணினேனத்தனை: போக்யதையைச் சொல்லிற்றும் ஸ்வபாவமிருந்தபடி சொன்னேனத்தனை; 'அது தீது' என்று விட்டும், 'இது நன்று' என்று

பற்றுகிறேனுமல்லேன்; உன்னைப் பற்றிற்றும் நீயாகையாலே, அவற்றை விட்டதும் நீயல்லாமையாலே" என்கிறார். வகுத்த விஷயத்திலே குண ஸௌந்தர்யாதிகளும் உண்டாகப் பெற்றேனித்தனை.

விளக்கம் – ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "ஐச்வர்யம் போன்றவை அற்பமானவை மற்றும் நிலையற்றவை என்பதால் அவற்றை நீவிர் 'வேண்டாம்' என்கிறீர். அப்படியானால், அவற்றைப் போன்று உள்ளது என்பது அல்லாமலும், நித்யமாகவும், நிலையாகவும் உள்ள ஆத்ம அனுபவம் உள்ளதே! அதனை நீவிர் அனுபவிக்கலாம் அல்லவோ?", என்றான். இதனைக் கேட்ட ஆழ்வார் ஸர்வேச்வரனிடம், "நீ உரைத்தது பொருந்துவதாக உள்ளதால் செய்யலாம்படி இருக்கிறது. ஐச்வர்யம் போன்றவை அற்பமானவை மற்றும் நிலையற்றவை என்னும்போது எனது ஆத்மாவால் ஸ்வருபத்தை உணர்ந்து நான் தவிர்த்தேன். உனது இனிமையை உள்ளது உள்ளபடி எனது இயல்பு இருந்த நிலையைக் கூறினேன். அவை தீயவை என்னும், இது நல்லது என்றும் அறிந்து பற்றுவதில்லை. உன்னைப் பற்றியதற்கும் நீயே காரணம் என்பதால், அவற்றை விட்டதும் நீ அவையாக இல்லாமையால் ஆகும்", என்கிறார். இயல்பகவே ஸ்வாமியாக உள்ள விஷயத்தின் குணங்கள் மற்றும் ஸௌந்தர்யம் ஆகியவை எனக்கு உணரப்பெற்றேன்.

வ்யாக்யானம் - (குறுகாநீளா) ஸ்வத: குறுகுகையும் நீளுகையுமின்றிக்கே யிருக்கை. (இறுதி கூடா) நிரந்வய விநாசமின்றிக்கே யிருக்கை. (எனையூழி யித்யாதி) காலோபாதியால் வரும் ஸங்கோச விகாஸங்களின்றிக்கே யிருக்கை. (அளவிலின்பஞ் சேர்ந்தாலும்) இங்ஙனே யிருக்கையாலே முடிவின்றிக்கேயிருக்கிற ஆத்மாநுபவ ஸுகத்தை ப்ராபித்தாலும். (மறுகாலின்றி) பகவதநுபவமானது ஒருகால் அநுபவித்தால் மற்றைப் போதின்றிக்கே யிருப்பது. (மாயோன்) மீண்டின்றிக்கே யொழிந்தாலும் விடவொண்ணாத கல்யாணகுண யோகஞ் சொல்லுகிறது. (உனக்கேயாளாகும் சிறுகாலத்தை யுறுமோ) "உன் திருவடிகளிலடிமையே புருஷார்த்தம்" என்றிருக்குமது, மறித்தின்றியிலே யிருப்பது, அதுதான் க்ஷண காலமாவது; இங்ஙனேயிருந்தாலும் அளவிலின்பஞ் சேருகையுறுமோ? இத்தைப் பார்க்க. (அந்தோ) பர்வத பாமாணுக்களுக்கு இருந்த வைஷம்யஞ் சொல்லும்படியாவதே! (தெரியிலே) தோற்றிற்றுச் சொல்லிற் செய்யலாவதில்லை: ஆராய்ந்து சொல்லுமன்று இங்ஙனல்லதில்லை. இவ்வர்த்தம் உபதேசகம்யம் ஆவதே!

விளக்கம் – (குறுகாநீளா) - தனது ஸ்வரூபம் சுருங்குவது மலர்வதும் என்று இல்லாமை. (இறுதி கூடா) - முடிவு இல்லாமலும், மாற்றங்கள் இன்றியும், அழிவு இன்றியும் இருத்தல். (எனை ஊழி இத்யாதி) - காலம் என்ற வரையறை காரணமாக உண்டாகும் சுருங்குதல் மலர்தல் இல்லாமை. (அளவிலின்பஞ் சேர்ந்தாலும்) - இவ்விதம் உள்ளதால் முடிவு என்பதே இல்லாமல் உள்ள ஆத்மா அனுபவத்தை அடைந்தாலும். (மறுகால் இன்றி) - பகவத் அனுபவமானது ஒருமுறை அனுபவித்தால், வேறு ஒரு பொழுது இன்றிக்கே உள்ளது. (மாயோன்) - மீள்வது இல்லாமல் போனாலும், விட இயலாத கல்யாண குணங்களின் சேர்த்தி கூறப்பட்டது. (உனக்கேயாளாகும் சிறுகாலத்தை யுறுமோ) - "உனது திருவடிகளில் அடிமைத்தனம் கொள்ளுவதே புருஷார்த்தம்" என்று இருத்தலானது சிறிது காலம் என்பதாக உள்ளபோதிலும், அளவுடன் அடையும் ஆனந்தம் என்பதுடன் அந்த நிலை சேருமோ? (அந்தோ) - ஒரு பெரிய மலைக்கும், சிறிய அணுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு அல்லவோ இங்கு கூறலாம்படி ஆகிறது! (தெரியிலே) - புலப்பட்டதைக் கூறினால், செய்ய இயலவில்லை; ஆராய்ந்து கூறினால், இவ்விதம் இல்லை; ஆகவே இந்தக் கருத்தை உபதேசம் செய்யும்படி ஆயிற்று.

6-10-11 தெரிதல் நினைதல் எண்ணல் ஆகாத் திருமாலுக்கு
உரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்
தெரியச் சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்
உரிய தொண்டர் ஆக்கும் உலகம் உண்டாற்கே

பொருள் – கேட்பதன் மூலம் தெளிவடைந்து, மனதால் நினைத்து எப்போதும் எண்ணியபடி உள்ள த்யானத்தைச் செய்தாலும், அளவிட இயலாத அனைத்தும் பொருந்தியவனும், மஹாலக்ஷ்மியின் நாதனும் ஆகிய அவனுக்கு மட்டுமே அடிமை என்றும், மற்ற யாருக்கும் அடிமை என இல்லாதபடி உள்ளவர்கள் என்றும் இருப்பவர்களுக்கு அடிமை என்று கூறலாம்படி உள்ள நம்மாழ்வார், பகவத் மேன்மை மற்றும் ஆத்ம மேன்மை ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டை விரிவாக அருளிச்செய்த இந்தப் பத்துப் பாசுரங்களைக் கற்க வல்லவர்களை, அனைத்தையும் காப்பவனுக்கு ஏற்ற தொண்டர்களாக, இந்தப் பாசுரங்களே செய்யும்.

அவதாரிகை – நிகமத்தில் இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேச்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிறார்.

விளக்கம் – “இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்பவர்கள், ஸர்வேச்வரனுக்கு அந்தரங்க தொண்டர்கள் ஆவார்கள்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (தெரிதலித்யாதி) ச்ரண மநந நிதித்யாஸநங்களாலே பரிச்சேதிக்க முடியாத ஸ்ரீய:பதிக்கு. “நயமாத்மா ப்ரவசநேந” இத்யாதி; கேவல ச்ரவணாதிகளுக்கு அவிஷயமா யிருக்கும்; அல்லாதபோது இவைதான் அநுபவமாயந்வயிக்குமிறே.

விளக்கம் – (தெரிதல் இத்யாதி) - கேட்டல், நினைத்தல், த்யானித்தல் ஆகியவை மூலம் அளவிட இயலாதபடி உள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனுக்கு. இவ்விதம் அளவிட இயலாதபடி உள்ளதற்கான ப்ரமாணம் முண்டக உபநிஷத்தில் - நயமாத்மா ப்ரவசநேந - இந்தப் பரமாத்மா மனனம், த்யானம், கேள்வி மூலம் அறியத்தக்கவன் அல்லன் - என்பதாகும். இவ்விதம் கூறினால், “காணத்தக்கவன், கேட்கத்தக்கவன், த்யானிக்கத் தக்கவன்” என்று கூறும் ச்ருதி வாக்கியங்களுடன் முரண்பாடு உண்டாகாதோ என்பதற்கு சமாதானம் கூறுகிறார்; ப்ரீதி அல்லாத கேள்வி ரூபமாக ஆராயும்போது அவற்றுக்கு அப்பாற்பட்டவனாக இருப்பான்; இது போன்று அல்லாமல், ப்ரீதியுடன் கூடிய கேள்வி ரூபமாக ஆராய்ந்தபோது இவை மூலம் அனுபவிக்கத்தக்கவனாக இருப்பான்.

வ்யாக்யானம் - (திருமாலுக்கு) இதுக்கு அடி ஸ்ரீய:பதியாகை; அதிறே ஸர்வாதிக வஸ்துவுக்கு அடையாளம். (திருமாலுக்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்) ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷபூதரான ஆழ்வார். ஸம்ஸார ஸ்வபாவாநுஸந்தாநம் பண்ணின கொடுமையாலும், பகவத் விஷயத்திலே அவகாஹித்த கனத்தாலும், பெருவிடாயன் மடுவிலே விழுமாபோலே சேஷத்வத்தினுடைய எல்லையிலே விழுகிறார். இது இவருடைய அஹம் புத்தியிருக்கிறபடி. தேஹாத்மாபிமாநியானபோது தேஹத்திலே அஹம் புத்தியைப் பண்ணும்; “தேஹாத் வ்யதிரிக்தம் ஒன்றுண்டு” என்று அறிந்தபோது ஆத்மாவிலே அஹம் புத்தியைப் பண்ணும்; தன்னை பகவச்சேஷபூதனாக அநுஸந்தித்தபோது ப்ரகார மாத்ரத்திலே நின்று ஐச்வர்யாதிகளைக்

கொண்டுபோம், "சேஷத்வமே புருஷார்த்தம்" என்று அறிந்தபோது தன்னை ததீய சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்கக் கடவன். "பயிலுஞ் சுடரொளி"க்குப் பின்பு ததீய சேஷத்வ பர்யந்தமாயாயிற்று, இவருடைய அஹமர்த்தம் இருப்பது. இவ்வளவு வருகையிறே அநந்யார்ஹ சேஷத்வமாவது.

விளக்கம் – (திருமாலுக்கு) - இவ்விதம் இவன் உள்ளதன் காரணம், மஹாலக்ஷ்மியின் நாதன் என்பதால் ஆகும். ஆனால் கேள்வி போன்றவற்றால் அளவிட இயலாதபடி உள்ள நிலைக்கு, "மஹாலக்ஷ்மியின் நாதன்" என்பது காரணமாகுமோ என்றால், அது அல்லவோ அனைத்தையும் ஆள்கின்ற வஸ்துவின் அடையாளம் ஆகிறது! (திருமாலுக்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்) - மஹாலக்ஷ்மியின் நாதனான உள்ள ஸர்வேச்வரனுக்கு மட்டுமே, வேறு யாருக்கும் இல்லாமல், தொண்டராக உள்ள ஆழ்வார். ஸம்ஸாரத்தின் தன்மையை எண்ணிய கொடுமையாலும், பகவத் விஷயத்தில் மூழ்கிய கனத்தாலும், மிகுந்த தாகம் கொண்ட ஒருவன் குளத்தில் குதித்தது போன்று அடிமைத்தனத்தின் எல்லையில் விழுந்தார். இதன் மூலம் ஆத்மாவுக்கு அடையாளம், "அடியார்க்கு அடியவராக இருப்பதே ஆகும்" என்று தேறுகிறது; இதுவே ஆழ்வாரின் "நான்" என்பதாக உள்ளது. இந்த உலகில் உள்ளவர்கள், சரீரத்தையே "நான்" என்று ஆத்மாவாக எண்ணும்போது, இவர் இவ்விதம் சிந்திப்பதற்கு என்ன காரணம் என்பதற்கு விடை தருகிறார். சரீரமே ஆத்மா என்று எண்ணும்போது, சரீரத்தில் "நான்" என்ற எண்ணம் ஏற்படுகிறது; "சரீரத்தைக் காட்டிலும் வேறு ஒன்று உண்டு" என்று அறியும்போது, ஆத்மாவில் "நான்" என்ற எண்ணம் உண்டாகிறது. தன்னைப் பகவானுடைய தொண்டன் என்று எண்ணும்போது, சரீர அளவில் நின்று ஐச்வர்யம் போன்றவற்றின் பின்னே செல்வர்; "அடிமையாக இருத்தலே பேறு" என்ற அறிந்தபோது, தன்னைத் தொண்டர்களுக்குத் தொண்டன் என்பது முடிய எண்ணுவர். ஆனால் இவ்விதம் "தொண்டர்களுக்குத் தொண்டன்" என்று கூறுவதை மற்ற திருவய்மொழிகளில் காணவில்லையே என்பதற்கு விடை தருகிறார்; "பயிலும் சுடர் ஒளி" என்பதற்குப் பின்னர், "தொண்டர்க்குத் தொண்டர்" என்பது வரையே, இவருடைய எண்ணம் இருந்தது; இதுவே இவருடைய "நான்" என்பதன் பொருளாகவும் உள்ளது. ஆனால் இவ்விதம் கூறினால், "ஈச்வரனுக்கு அடிமை" என்று கூறும் ப்ரமாணங்களுடன் முரண்பாடு ஏற்படாதோ என்பதற்கு விடை தருகிறார்; "தொண்டர்க்குத் தொண்டர்"

என்பது முடிய வருவது அல்லவோ, "மற்ற யாருக்கும் வசப்படாமல், ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்படுதல்" என்பதாகிறது.

வ்யாக்யானம் - (தெரியச் சொன்ன இத்யாதி) பகவத் வைலக்ஷண்யத்தையும், ஸம்ஸாரத்தினுடைய தோஷத்தையும் விசதமாகச் சொன்ன பத்தும். (உரிய தொண்டராக்கும் உலகமுண்டாற்கே) ஸர்வ ரக்ஷகனான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷமாக்கும் இத்திருவாய்மொழி. (உரிய தொண்டராக்கும்) ஸம்ஸாரம் நன்றுமாய் பகவத் விஷயம் தீதானாலும் அத்தை விடமாட்டாதவர்கள்.

விளக்கம் – (தெரியச் சொன்ன இத்யாதி) - பகவானுடைய மேன்மையில் உள்ள வேறுபாடு மற்றும் ஸம்ஸாரத்தின் தோஷம் ஆகியவை குறித்து விரிவாகக் கூறிய இந்த பத்துப் பாசுரங்களும். (உரிய தொண்டராக்கும் உலகமுண்டாற்கே) - அனைத்தையும் காக்கும் ஸர்வேச்வரனுக்கு மட்டுமே வசப்பட்ட நிலையை ஏற்படுத்தும். (உரிய தொண்டராக்கும்) - ஸம்ஸாரம் நல்லதாகவும், பகவத் விஷயம் தீயது என்றாலும், அதனை விட மாட்டாதவர்கள்.

திருவாய்மொழி ஆறாம் பத்து பத்தாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

உலகமுண்ட ப்ரவேசம்

வ்யாக்யானம் – கீழில் திருவாய்மொழியில் ப்ராப்ய வேஷமிருக்கும்படி குறைவறச் சொன்னார்; இத்திருவாய்மொழியில் ப்ராபக வேஷம் குறைவறச் சொல்லுகிறார்; கீழில் அதில் உபாய ப்ரஸங்கமுண்டேயாகிலும், ப்ராப்ய ப்ரதாநமாகக் கடவது; இதில் உபேய ப்ரஸங்கம் உண்டேயாகிலும், ப்ராபக ப்ரதாநம். கீழில் திருவாய்மொழி திருமந்த்ரம்போலே, இத்திருவாய்மொழி சரம ஸ்லோகம் போலே.

விளக்கம் – இந்தத் திருவாய்மொழியில் சரணம் புகுகிறார் என்னும் விஷயம் கூறப்படுவதால், சரணாகதனாகிய ஸர்வேச்வரனுக்குப் பக்தனை காட்டிலும் உள்ள ஏற்றம் என்னவென்றால், அடைய வேண்டிய இலக்கு மற்றும் அடைய வைக்கும் உபாயம் ஆகிய இரண்டும் அவனே என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திருவாய்மொழியிலும், கடந்த திருவாய்மொழியிலும் ஸர்வேச்வரனுடைய இத்தகைய இரண்டு தன்மைகளைக் கூறுகிறார் என்று கருத்து. கடந்த

திருவாய்மொழியில் ப்ராப்யத்தின் தன்மை, அதாவது அடைய வேண்டிய இலக்கின் தன்மை, அவனுக்கு உள்ளதைக் குறைவு இன்றி உரைத்தார்; இதனை “கோலத் திருமாமகளோடு உன்னை” என்றும், “தடந்தாமரைகட்கே” என்றும் கூறியதைக் கொண்டு காணலாம். இந்தத் திருவாய்மொழியில் ப்ராபகத்தன்மை, அதாவது அடைய வைக்கும் உபாயம், அவனுக்கு உள்ளதைக் குறைவறக் கூறுகிறார்; இதனை “அகலகில்லேன்” என்பதில் காணலாம். கடந்த திருவாய்மொழியில் உபாயம் குறித்து அதிகம் கூறப்பட்டாலும், அடையவேண்டிய இலக்கே முதன்மையாகக் கொண்டு கூறப்பட்டது. ஆனால் கடந்த திருவாய்மொழியில் “காப்பேன்” என்றுள்ள உபாயத் தன்மையும், இந்தத் திருவாய்மொழியில் “நாற்றோளமுதே” என்றுள்ள உபேயத் தன்மையும் கூறப்படவில்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இரண்டும் இரண்டிலும் இருந்தாலும், ஒவ்வொன்றில் ஒவ்வொன்று முதன்மையக உள்ளதற்கு உதாரணம் கூறுகிறார்; கடந்த திருவாய்மொழியானது திருமந்திரம் போன்றும், இந்தத் திருவாய்மொழியானது சரமச்லோகம் போன்றும் உள்ளன; திருமந்திரமானது இலக்கைக் கூறுவதில் நோக்கம் கொண்டது, சரம ச்லோகமானது உபாயத்தில் நோக்கம் கொண்டதாகும்.

வ்யாக்யானம் - இரண்டும் ஒன்றிலேயுண்டிறே என்னில்? அது, சக்தி யோகத்தாலே வருமதிறே; அவஸ்த்தாந்தங்களைப் பற்றி வரும் இரண்டும் இரண்டாயே யிருக்கக் கடவதிறே.

விளக்கம் – ஆனால், பேறு மற்றும் உபாயம் ஆகிய இரண்டுமே ஒன்றிலேயே உள்ளது அல்லவோ என்று கேட்கலாம்; அதாவது, பேறு மற்றும் உபாயம் ஆகிய இரண்டுமே நித்யம் என்பதால், பால் மருந்தாவது போன்று, பேறாக உள்ள நிலையிலும் உபாயமாக இருத்தல் என்ற தன்மை ஈச்வரனிடம் உள்ளது என்னும்போது, “கடந்த திருவாய்மொழியானது பேறு குறித்தும், இந்தத் திருவாய்மொழியானது உபாயம் குறித்தும் உள்ளது” என்று கூறலாமோ என்று கேட்கலாம்; இதற்கு விடை தருகிறார். அது சக்தியின் சேர்க்கையால் வரும்; அதாவது பேறாக உள்ள வஸ்துவே, உபாயமாகவும் இருக்கவல்ல சக்தி காரணமாக, இந்த இரண்டு தன்மைகளும் ஒரே வஸ்துவில் உள்ளபோதிலும், சேதநன் பற்றும் நிலை மற்றும் பேற்றை அடைந்து அனுபவிக்கும் நிலை என்பதான

வேறுபாடுகள் காரணமாக, பேறு மற்றும் உபாயம் ஆகிய இரண்டும் அந்தந்த முறையில் இருக்கவேண்டும்; எனவே இவ்விதம் பிரிப்பதால் எந்தக் குற்றமும் இல்லை.

வ்யாக்யானம் - பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச் செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நரானவர், ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், உபயவிபூதி யுக்தனாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய், "வைகுண்டேது பரே லோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ் ஸஹ" என்கிறபடியே ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளுக்குக் காட்சிக் கொடுத்துக் கொண்டிருக்கக் கடவ ஸர்வேச்வரன், "பலரும் நம்மையிழக்க, நாம் நெடுங்கை நீட்டாக இருக்கவொண்ணாது" என்று பார்த்தருளி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணி ஸமகாலத்திலுள்ளார்க்குத் தன் குணசேஷ்டிதங்களைக் காட்டி அநுபவிப்பித்தும், அக்காலத்திலும் பிற்பாடரான ஸம்ஸாரிகளுக்கும் இழக்கவேண்டாதபடி ருசிஜனகனாய்க் கொண்டு திருமலையிலே நாய்ச்சிமாருடனே கூட நின்றருளினபடியைக் கண்டு; அதிகாரி நியதி, கால நியதி, அங்க நியதி என்றாற்போலே சொல்லுகிற நிர்ப்பந்தங்கள் ஒன்றுமின்றிக்கே ஆச்ரயிக்கலாம்படி யிருக்கிற ஸௌசீல்யத்தைக் கண்டு, திருவேங்கடமுடையான் திருவடிகளிலே, பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ் செய்து சரணம் புக்குத் தம்முடைய அத்யவஸாயத்தை அறிவிக்கிறார்.

விளக்கம் – பெரிய துன்பத்துடன், பரமபதம் முடிய கேட்கும் அளவிற்கு இவர் கூப்பிட்டபோதிலும், அனைத்தையும் காப்பாற்றும் அவன், இவரிடம் வந்து தனது திருமுகத்தைக் காண்பிக்காத காரணத்தால் மிகவும் தளர்ந்தார். ஆகவே இவர் செய்தது என்ன? இதனை அடுத்து விளக்குகிறார். மஹாலக்ஷ்மியின் நாதனாகவும்; தனது அனைத்து விருப்பங்களும் எப்போதும் நிறைவேறப் பெற்றவனாகவும்; இரண்டு விபூதிகளையும் கொண்டவனாகவும்; அனைத்துவிதமான கல்யாண குணங்களின் இருப்பிடமாகவும்; "வைகுண்டேது பரே லோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ் ஸஹ - சிந்தனைக்கும் எட்டாத ஸ்வரூபம் கொண்டவனும், லோகங்களின் நாயகனும் ஆகிய மஹாவிஷ்ணு, தனது பிராட்டியாரோடும், பக்தர்கள் பாகவதர்கள்

ஆகியோருடனும் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளான்" என்று கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளுக்குக்குக் காட்சி கொடுத்தபடி இருக்கக்கடவனும் ஆகிய ஸர்வேச்வரன் செய்தது என்ன? "பலரும் நம்மை இழந்தபடி உள்ளபோது, நாம் அவர்களுக்கு எட்டாத தூரத்தில் இருத்தல் கூடாது" என்று தீரமானித்து, இராமன் மற்றும் க்ருஷ்ணன் போன்ற பல அவதாரங்களைச் செய்தருளி, தன்னுடன் அந்தந்த அவதார காலங்களில் வாழ்ந்தவர்களுக்கு தனது குணங்களையும் லீலைகளையும் வெளிப்படுத்தி, அவர்களை அனுபவிக்கச் செய்தான். அந்தந்த காலகட்டத்தின் பின்னே வந்தவர்களாகிய ஸம்ஸாரிகள், தனது அத்தகைய அனுபவங்களை இழக்கக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கு ருசி ஏற்படுத்த, திருமலையில் பிராட்டியாருடன் நின்றான். தசரதன், வஸுதேவன் போன்றவர்கள் மட்டுமே அனுபவிக்கலாம் என்ற அதிகாரி கட்டுப்பாடுகள்; க்ருதயுகம் போன்ற கால கட்டுப்பாடுகள்; நீராடுதல் போன்ற அங்க கட்டுபாடுகள் ஆகிய நிர்ப்பந்தங்கள் ஏதும் இல்லாமல், எளிதில் அடையலாம்படி நிற்கும் எளிமையைக் கண்டார். திருவேங்கடமுடையானின் திருவடிகளில், பெரியபிராட்டியின் முன்னிலையில், தனது "வேறு கதியற்ற நிலை" என்பதை விண்ணப்பம் செய்து, அவனிடம் சரணம் புகுந்து, தனது எண்ணத்தை உணர்த்துகிறார்.

வ்யாக்யானம் - கீழேயும் பலவிடங்களிலே ப்ரபத்தி பண்ணினார்; அவ்விடங்களிலே "தர்மி புக்க விடத்தே நிரூபக தர்மங்களும் புகக் கடவது" என்கிற ந்யாயத்தாலே, லக்ஷ்மீ ஸம்பந்தஞ் சொன்னார்; இங்கு அது தன்னையே வாய்விடுகிறார். கீழில் ப்ரபத்திகள் திருமந்த்ரம் போலே, இது த்வயம் போலே. திருமந்த்ரத்திலும் லக்ஷ்மீ ஸம்பந்தத்துக்கு வாசகமான பதங்களுண்டாயிருக்கச் செய்தே, முக்த கண்டமாகச் சொல்லிற்று த்வயத்திலேயிறே; அது போலே இத்திருவாய்மொழி.

விளக்கம் – முன்பு நான்கு திருவாய்மொழிகளில் நான்கு முறை சரணம் புகுந்தார்; அவற்றுக்கும், இங்கு புகுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதைக் கூறுகிறார்; முன்பு பல இடங்களில் ப்ரபத்தி செய்தார்; அந்தந்த இடங்களில், "குணத்தைக் கொண்ட ஒருவன் செல்கின்ற இடங்களில், அவனை நிரூபிக்கவல்ல குணங்களும் உடன் செல்லும்" என்னும் ந்யாயத்தால், மஹாலக்ஷ்மி ஸம்பந்தம் கூறினார்; இங்கு

அதனையே வெளிப்படையாகக் கூறுகிறார். இதற்கு உதாரணம் கூறுகிறார்; முன்பு செய்த சரணாகதிகள் அனைத்தும் திருமந்திரம் போன்றும், இங்கு செய்யும் ப்ரபத்தியானது த்வயம் போன்றும் ஆகும். இதனை மேலும் விளக்குகிறார்; திருமந்திரத்திலும் மஹாலக்ஷ்மியின் ஸம்பந்தத்தினை உணர்த்தவல்ல ஆற்றல் கொண்ட சொற்கள் உள்ளபோதிலும், அத்தகைய ஸம்பந்தத்தை வெளிப்படையாக த்வயம் அல்லவோ கூறுகிறது? இங்கு "வாசகமான சப்தங்கள்" என்று பன்மையில் ஏன் கூறினார் என்றால், திருமந்திரத்தில் உள்ள "உகார, நார" ஆகியவற்றைக் குறித்து ஆகும்; இதனைப் போன்றே இந்தத் திருவாய்மொழியும் ஆகும்.

வ்யாக்யானம் – "தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந் மோஹஸ் ததா ஸுகம்"; (தாவதார்த்தி) "இழந்தது பெறவேணும்" என்னுமதுவும் அவ்வளவே. (ததாவாஞ்சா) அப்ராப்த விஷயத்தில் பண்ணும் சாபலமும் அவ்வளவே. (தாவந் மோஹா) தேஹத்தையும் ஆத்மாவையும் ஏகீக்ருத்ய புத்தி பண்ணுகை. (ததா ஸுகம்) "ஏஷஹ்யேவாநந்தயாதி" என்கிறதுக்கு விரோதமாய் வரும் ஸுகங்களும் அவ்வளவே. "யாவந்நயாதி சரணம் த்வாமசேஷாகநாசநம்" ஐச்வர்யம் ஆத்மப்ராப்தி பகவத்ப்ராப்தி விரோதி இவையெல்லா முன்னைக் கிட்டுமளவேயிறே நிற்பதென்கிறது. இப்படியே தம்முடைய ஸகல விரோதிகளும் போய்த் தம்முடைய ஸகலாபேக்ஷிதங்களும் கிடைக்கைக்கு ஒரு குறையில்லையென்று, ஸதா ஸந்நிஹிதனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

விளக்கம் – "ப்ரபத்தியானது மோக்ஷத்தைத் தரவல்லதோ" என்னும் கேள்விக்கு, "மோக்ஷத்தை மட்டுமே தரவல்லது என்பது கிடையாது, மற்ற பலன்களை அடைவதற்கும் உபாயமாக உள்ளது" என்பதை ப்ரமாணங்களுடன் கூறுகிறார்; ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் உள்ள "தாவத் ஆர்த்தி: ததாவாஞ்ச தாவந்மோஹ: ததா ஸுகம் யாவத் நயாதி சரணம் த்வாம் அசேஷாக நாசநம்" என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார்; இந்த ச்லோகம் பகவானை நோக்கி நான்முகன், நான்குவிதமான உபாஸகர்கள் குறித்துக் கூறுவதாக உள்ளது. (தாவத் ஆர்த்தி) - "இழந்ததைப் பெறவேண்டும்" என்பது, அவனைப் பற்றும் காலம் முடிய மட்டுமே ஆகும். "இழந்ததைப் பெறவேணும்" என்பதன் மூலம், ஆர்த்தன் கூறப்பட்டான்; அதாவது, இழந்த செல்வத்தை மீண்டும் அடையவேண்டும் என்று விரும்பும் "ஐச்வர்ய காமன்" கூறப்பட்டான். (ததாவாஞ்சா) - இதற்கு முன்பு கிட்டாத செல்வம் போன்றவற்றை விரும்புவதும், அவனைப் பற்றும் காலம் முடிய மட்டும் ஆகும்.

“வாஞ்சா” என்பது செல்வத்தை விரும்பும் ஒருவனுடைய ஆசையைக் கூறுவதால், “ததாவாஞ்சா” என்பது, புதியதாக செல்வம் வேண்டுபவனைக் கூறுகிறது; “அப்ராப்த விஷயாம்” என்பது, இதுவரை பார்த்திராத செல்வம் என்று பொருள். (தாவந் மோஹா) - சரீரத்தையும் ஆத்மாவையும் ஒன்று என்பதாக எண்ணுதல் என்பதும், அவனை அடையும் காலம் முடிய மட்டுமே ஆகும். “தாவந் மோஹ” என்பது ஆத்மாவை அடையவேண்டும் என்ற விருப்பம் உள்ளவனைக் கூறுகிறது. “மோஹம்” என்றால், ஆத்மாவை அடையவேண்டும் என்று எண்ணுபவனுக்கு, அவனுடைய ஆத்ம அனுபவத்திற்கு விரோதியாக உள்ள “சரீரமே ஆத்மா” என்று எண்ணும் அறியாமை ஆகும்; ஸர்வேச்வரனுடைய திருவடிகளை அடைந்தால் அறியாமை விலகுவதால், அதுவரை மட்டுமே இவனுக்கு இத்தகைய அறியாமை உள்ளது என்று கருத்து. (ததா ஸுகம்) – “ஏஷ ஹி ஏவ ஆநந்தயாதி – இப்படி அல்லவோ இவனுக்கு ஆனந்தம் தருகிறான்” என்பதற்கு ஏற்ப உள்ள ஆனந்தத்திற்கு விரோதமாக உள்ள ஸுகங்கள்; இவையும் அவனைப் பற்றும் காலம் முடிய மட்டுமே ஆகும்; இதன் மூலம் ஞானி கூறப்பட்டான்; “ஸுகம்” என்பது ஆத்ம அனுபவம் மற்றும் செல்வ ஸுகங்கள் ஆகும்; இவை, பகவானை அடையவேண்டும் என்னும் ஆசை கொண்டவனுக்குத் தடைகள் ஆகும்; அவனை அண்டியவுடன் இவை விலகுவதால், அவனை அண்டும் காலம் முடிய மட்டுமே இந்தச் சுகங்களும் உள்ளன என்று கருத்து. (யாவந்நயாதி சரணம் த்வாம் அசேஷாகநாசநம்) - செல்வம், ஆத்ம அனுபவம், பகவானை அடைவதில் உள்ள தடை போன்ற பலவும் உன்னை அடையும் காலம் முடிய மட்டுமே உள்ளது. இதுவரை கூறப்பட்ட அனைத்தையும் தொகுத்து, “அசேஷாக நாசநம்” என்பதை “ஐச்வர்யம்” என்று தொடங்கும் வாக்கியத்தால் கூறுகிறார். மேலும் “அர்த்தி:, வாஞ்சா” ஆகிய இரண்டிலும் அதிகாரிகள் வேறுபாடு உள்ளது என்றாலும், பலன் ஒன்றாக உள்ளதன் காரணமாக ஒன்றாகச் சேர்த்து “ஐச்வர்யம்” என்றார். “விரோதி” என்ற பதத்தை “ஐச்வர்ய விரோதி, ஆத்ம ப்ராப்தி விரோதி, பகவத் ப்ராப்தி விரோதி” ஆகிய அனைத்திலும் சேர்க்கவும். இப்படியாகத் தனது அனைத்து விரோதிகளும் நீங்கி, தனது விருப்பங்கள் அனைத்தும் கிடைப்பதற்கு எந்த ஒரு குறையும் இல்லை என்று, அனைவருக்கும் எப்போதும் அருகில் உள்ளவனாகிய திருவேங்கடமுடையானுடைய திருவடிகளில் சரணம் புகுகிறார்.

வ்யாக்யானம் – இனித் தான், சரணாகதி பலப்ரதையாமிடத்தில் சரண்யன் பக்கலிலே பண்ணவும் வேணும்; தான் அதிகாரியாகவும் வேணும். வ்யதிரிக்த விஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹநந ஹேதுவாகக் காணாநின்றோமிறே. இங்ஙனே யிருக்கச் செய்தேயும் அவ்வோவிடங்களிலேயும் பலிக்கிற இது, இவ்விஷயத்தில் பலியா நின்றதென்னுமிடம் கிம்புநர் ந்யாய ஸித்தம். இனித் தான் அதிகாரியாமிடத்தில், மெய்யே அநந்யகதியாகவும் வேணும்; சரணம் புகா, பலித்ததில்லையென்னா, "அஸமர்த்தம் விஜாநாதி" என்பாராகாது.

விளக்கம் – " உலகம் உண்ட பெருவாயா" போன்றவை முதல் சரணம் புகத்தக்க ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தையும், "குலதொலடியேன்" என்பது போன்றவைகளால் அதிகாரி ஸ்வரூபத்தையும் கூறி சரணம் புகுகிறார். சரணாகதியின் மூலம் பலன் அடைவதற்கு இந்த இரண்டும் அவசியமாகிறது என்பதால், இவற்றை "இனித்தான்" என்று தொடங்கி கூறுகிறார். சரணாகதியானது பலனை அளிக்கும்போது, சரணம் என்று புகப்பட்ட ஸர்வேச்வரன் விஷயத்திலும், அதிகாரி விஷயத்திலும் வேண்டுவது உள்ளன. "சரண்யன்" என்பது குணம் நிறைந்தவனைக் குறிப்பதாகிறது. குணங்கள் இல்லாதவனிடம் சரணாகதி செய்தால் பலனில் தாழ்வு ஏற்படுவதுடன் மட்டும் அல்லாமல், கெடுதலும் உண்டாகும். நல்ல குணம் இல்லாதவர்களிடம் சரணம் புகுதல் என்பது கொல்வதற்குக் காரணமாகவும் அமைகிறது; இதனை, பரசுராமனிடம் சரணம் புகுந்த தசரதனிடம் காணலாம். ஆனால் பகவானைக் காட்டிலும் வேறுபட்ட சிபிச்சக்ரவர்த்தி போன்றவர்களிடம் சரணம் புகுந்த புறா போன்று சரணம் புகுந்தவர்களுக்கு, அந்தச் சரணாகதி பலன் தந்தது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அதாவது அந்தந்த இடங்களில் பலிப்பதான இந்தச் சரணாகதியானது, இந்த வஸ்து விஷயத்தில் பலிப்பது என்பது "மீண்டும் கூற வேண்டுமோ" என்ற ந்யாயத்தின் அடிப்படையில் அமைகிறது. ஆக சரணாகதிக்கு அதிகாரியாக வேண்டும் என்றால், உண்மையாகவே "மற்ற கதி இல்லை" என்று உணர்ந்து நிற்கவேண்டும். மற்ற கதி உள்ளவனுக்கு சரணாகதி பலன் தராது என்பதைப் ப்ரமாணம் மூலம் கூறுகிறார்; சரணம் புகும்போது பலிக்கவில்லை என்றால், யுத்தகாண்டம் (21-20) – அஸமர்த்தம் விஜாநாதி – பொறுமை உள்ள என்னை இந்த ஸமுத்ரமானது சக்தி இல்லாதவன் என்று எண்ணுகிறது - என்று எண்ணக்கூடாது.

வ்யாக்யானம் – "மயர்வற மதிநலமருளினன்" என்னா, அநந்தரத்திலே மடலெடுத்துக் கொண்டு புறப்படுவார் வேணும்.

விளக்கம் – அப்படியானால், யார் அதிகாரி என்றால், ஆழ்வார் போன்று உள்ளவர்களே ஆவர் என்கிறார்; அவன் "மயர்வற மதிநலம் அருளினான்" என்பதற்கு ஏற்ப, அவனுடைய க்ருபை என்பதையே சரணாகதிக்கு உபாயமாக உறுதியாக்க வேண்டும். அது உடனே பலிக்கவில்லை என்றால், தனது சொந்த முயற்சி ஏதும் செய்யாமல், "மடல் எடுக்கிறேன்" என்று அச்சத்தை உண்டாக்கி, அதன் மூலம் அவனால் கார்யம் செய்து கொள்ள வேண்டும். "மடல் எடுத்தல்" என்பது ஆத்ம ஸ்வருபத்திற்கு விரோதம் என்றாலும், அவன் மூலமாகவே தனது கார்யத்தை நிறைவேற்றிக் கொள்ள உதவும்படி உள்ளதால், "வேறு கதி இல்லை" என்ற நிலைக்கு, அதனால் தோஷம் ஏற்படாது என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டவராக "மடல் எடுத்துக் கொண்டு புறப்படுவார் வேணும்" என்றார்.

வ்யாக்யானம் - பண்ணின ப்ரபத்திக்கு பலந் தாழ்த்ததென்னா வேறே போக்கடியுடையார்க்குக் காரியமாகாதிறே. "ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:" என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக, ஜல தத்வத்தை யழித்துப் பொகட்டு மற்றை நாலையுங் கொண்டு கார்யங் கொள்ளுகிறேன் என்றறிறே.

விளக்கம் – யுத்தகாண்டம் (21-20) – அஸமர்த்தம் விஜாநாதி – சக்தி இல்லாதவன் என்று எண்ணுகிறது – என்று கூறுவதற்கு ஏற்ப அவனை எண்ணுபவர்கள் அதிகாரிகள் என்னும்போது உண்டாகும் தாழ்வு என்ன என்பதற்கு விடை தருகிறார்; செய்த ப்ரபத்தியானது பலனைத் தாமதமாக அளிக்கும்போது, வேறு கதி உள்ளவர்களுக்கு, கார்யம் செய்ததாக அமையாது அல்லவோ? வேறு கதி உள்ளவர்கள் யார் என்பதைக் கூறுகிறார்; யுத்தகாண்டம் (21-22) - ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா: – ஸமுத்ரத்தை வற்றும்படிச் செய்கிறேன்; இந்த வானர வீரர்கள் கால்களால் நடந்தே இதனைக் கடப்பார்கள் - என்று, ஸமுத்ரராஜன் காலம் தாழ்த்தியதையே காரணமாகக் கொண்டு ஸமுத்ரராஜனை அழித்து, வேறு நான்கு பொருள்கள் மூலம் தனது செயலை நிறைவேற்றிக் கொள்கிறேன் என்றான் அல்லவோ?

வ்யாக்யானம் – "க்ஷமயாஹி ஸமாயுக்தம்" – "ஒரு பெண் பெண்டாட்டி எனக்கு என்றத்தை ஸ்வீகரிக்கை யாவதென்?" என்று ராஜ்யத்தைப் பொகட்டுப் பொறுத்துப் போந்தார்; இங்கே வருணனை வழிவேண்டி அவன் முகங்காட்டிற்றிலன் என்னா, சீறிக் காலைக் கையைக் கட்டாநின்றார்; இது இருந்தபடியென்?" என்றாற் போலேயிருந்தார்கள் முதலிகள்.

விளக்கம் – அடுத்து யுத்தகாண்டம் (21-21) - க்ஷமயாஹி ஸமாயுக்தம் - என்ற ச்லோகத்தில் உள்ள "திக்க்ஷமாம்" என்ற பதத்தில் நோக்கம் வைத்து அருளிச்செய்கிறார்; இதனை "ஒரு பெண் பெண்டாட்டி" என்று தொடங்கி உரைக்கிறார். "ஒரு பெண், அதாவது தசரதருடைய மனைவி, தனக்கு வேண்டும் என்னும் ராஜ்யத்தை நாம் விரும்புவது ஏன்?" என்று எண்ணியவனாக, அந்த ராஜ்யத்தைத் துறந்து, பொறுமையுடன் சென்றான்; அதாவது, கைகேயியிடம் பொறுமை காண்பித்தான். அந்தப் பொறுமையை இங்கும் ஸமுத்ரராஜனிடம் காண்பித்திருக்கவேண்டாமோ? இங்கு ஸமுத்ரராஜனை வழி விடும்படி விண்ணப்பித்தும், அவன் முகம் காட்டவில்லை என்பதால் சீற்றம் கொண்டு, வில்லின் காலை மிதித்தபடி, கைகளால் வில்லை வளைத்தான். இது ஏன் என்று வானரர்கள் திகைத்தனர். ஆனால் இங்கு "கை" என்பது வில்லின் சரட்டைக் கூறுமோ என்றால், "கை புடை கோதை கைகட்டியாகும்" என்று நிகண்டு கூறுவதால் ஆகும்; அதாவது கை, புடை, கோதை என்பவை வில்லின் சரட்டு ஆகும். அடுத்து வானரவீரர்கள், "இராமன் ஏன் கைகேயியிடம் ஒருவிதமாகவும் ஸமுத்ரராஜனிடம் வேறுவிதமாகவும் நடக்கிறார்?", என்று கொண்ட ஐயத்திற்கு விடை அளிக்கிறார். அதாவது ஸமுத்திரமானது இராமனை ஸாமர்த்தியம் இல்லாதவன் என்று எண்ணியது போன்று கைகேயி எண்ணவில்லை; அபலை என்பதால் ராஜ்யத்தில் ஆசை கொண்டாள்; ஆகவே பொறுமையுடன் விட்டு வந்தான்; ஆனால் ஸமுத்ரமானது இராமனை ஸாமர்த்யம் அற்றவனாக எண்ணியதால் பொறுமை இல்லை என்று கருத்து.

வ்யாக்யானம் – "இவன் வந்திலன்" என்று நாம் சீறவொண்ணாதபடி, வாலி புறப்படுகிறபோது தாரை வந்து காற்கட்டினவோபாதி, க்ஷமை வந்து நம்மைக் காற்கட்டா நின்றதென்றார்: (மாம்) "ஸுப்தமத்த குபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்" என்று, கோபம் விளைந்த வநந்தரம் ஐந்மத்தை யுணர்ந்தார். "பிறர் கை

பார்த்திருக்கும் குடிப் பிறப்பன்று” என்றிருக்கிறதில்லை; நம்மை “ஐயர் மகன்” என்று அறிகிறதில்லை. (ஸுப்தேத்யாதி) தந்தாம் ஸ்வபாவத்தை மறைத்து வர்த்தித்தவர்கள், ஸ்வப்நாதி தசையிலே ஸ்வஸ்வபாவாநுகுணம் பாஷிப்பர்களிறே; அப்படியிவரும் க்ஷத்ரியத்வத்தை யுணர்ந்தார். (அயம்) மஹோததி யென்கிற பெருமையை நினைத்திரா நின்றது; தன்னைச் சிறாங்கித்திருக்கிற நம்மை அறிகிறதில்லை. (மகராலய:) ஒரு அயோத்யாதிபதி கோசலாதிபதிகளோடொக்கக் காணும் தன்னை நினைத்திருக்கிறது; தன்னை மீன்படு குட்டமாக அறிகிறதில்லை. “அஸமர்த்தம் விஜாநாதி” செவ்வை கெடப் பறிமாறினாரையும் ஒக்க விட்டுக் காரியங் கொள்ளவல்லோமென்று அறிகிறதில்லை.

விளக்கம் – “ஆனால் இராமன் ஏன் மூன்று நாள்கள், சரணம் புகுந்து, ஸமுத்ரக்கரையில் கண் வளர்ந்து, அதன் பின்னர் தனது வலிமையை காண்பிக்கவேண்டும்? முதலிலேயே காண்பித்திருக்கலாம் அல்லவோ?”, என்று வானரர்கள் எண்ணுவதைத் தனது திருவுள்ளத்தில் கொண்டவராக விடை அளிக்கிறார்; இராமன் தனது திருவுள்ளத்தில், “இந்த ஸமுத்ரராஜன் வரவில்லை என்று சீற்றம் கொண்டு புறப்படாதபடி, ஸுக்ரீவனைக் கொல்ல வாலி புறப்பட்டதுபோது அவனைத் தடுத்த தாரை போன்று, நம்மை நமது பொறுமை என்ற குணம் தடுத்தது”, என்று எண்ணுகிறான்; இதற்கு யுத்தகாண்டம் (21-20) என்ற ச்லோகத்தில் உள்ள “க்ஷமயாஹி” என்ற பதம் காணவேண்டும். அடுத்து அந்த ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். (மாம்) – “ஸுப்தமத்த குபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம் - உறங்கியவன், மதம் கொண்டவன், கோபம் கொண்டவன் ஆகியோருக்கு அவர்களுடைய இயல்பான தன்மை வெளிப்படும்” என்பதைக் கருத்தில் கொண்டு, தனக்கு கோபம் பிறந்ததும் தன்னுடைய குலம் பிறப்பை இராமன் எண்ணினான். இராமனுடைய பிறப்பானது, “மற்றவர்கள் உதவியை எதிர்நோக்கும் குடியில் பிறப்பு அன்று” என்று ஸமுத்ரராஜன் அறியவில்லை; (ஸுப்தேத்யாதி) - தங்களுடைய இயல்பான தன்மைகளை மறைத்து வைப்பவர்களும் கூட, கனவு ஏற்படும் நிலையில் அந்த இயல்புகளை வெளிப்படுத்துவார்கள்; அது போன்றே இங்கு இராமனும் க்ஷத்ரிய தர்மத்தை உணர்ந்தான். (அயம்) – மிகப் பெரிய ஸமுத்திரம் என்று, இன்டஹ் ஸமுத்ரராஜன் தனது பெருமையை மட்டுமே எண்ணியபடி உள்ளான். தன்னை எண்ணி கோபம் கொண்ட நம்மை இவன் சிந்திக்கவில்லை. (மகராலய:) - இந்த ஸமுத்ரராஜன்

தன்னை ஒரு அயோத்தியின் அரசன், கோசலத்தின் அரசன் ஆகியோருடன் ஒப்பிட்டு எண்ணிக் கொள்கிறான். தன்னை மீன்கள் வாழும் ஒரு குட்டையாக எண்ணவில்லை. (அஸமர்த்தம் விஜாநாதி) - தவறான வழியில் நடந்தவர்களையும் கூட நாம் சீர்திருத்தி, அவர்கள் மூலமாக நற்செயல் செய்யவல்லவர் என்று நம்மை இந்த ஸமுத்ரராஜன் அறியவில்லை.

வ்யாக்யானம் - இவ்வளவில் செய்ய வடுப்பதென்? என்னில் (திக் க்ஷமாம்) இப்போது க்ஷமையை வேண்டோம். விநியோகமுள்ளவிடத்தேயன்றோ கார்யங் கொள்வது? கோபத்தோபாதி, கார்யகாலத்தே யழைத்துக் காரியங் கொள்ளப் பார்த்தோம். அதுவென்? இக்ஷ்வாகு வம்ச்யராயிருப்பார்க்கு க்ஷமை கொண்டு கார்யங் கொள்ள வேண்டாவோ? என்னில்; (ஈத்ருசே ஜநே) அத்தால் பெற்றதென்? அது இங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே பலியா நின்றதே. ஒன்பது பாட்டாலும் சரண்யன்படி சொல்லி, பத்தாம் பாட்டிலே சரணம் புகுகிறார்.

விளக்கம் - இவ்விதம் பலவாறு சிந்தித்த இராமன், “இனி செய்ய வேண்டியது என்ன? (திக் க்ஷமாம்) - இனி பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டாம். தன்னையே தருபவர்களிடம் அல்லவோ உதவிகள் கேட்கலாம். கோபத்தைப் போன்று, தகுந்த காலத்தில் அழைத்து உதவி கேட்கலாம் என்று நாம் இருந்தோம்”, என்று எண்ணினான். இதற்கு ஒரு சிலர், “அது என்ன? இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த ஒருவருக்குப் பொறுமையுடன் நின்று கார்யம் செய்து கொள்ளவேண்டாமோ?”, என்றான். இதற்கு இராமன், “(ஈத்ருசே ஜநே) - அதனால் நாம் பெற்ற பலன் என்ன? அத்தகைய பொறுமை இங்கு பிழைக்கவில்லை. பொறுமைக்கு இங்கு உள்ள ஸமுத்ரம், இராவணன் ஆகியோருடைய ஸம்பந்தம் பலன் அளிக்காமல் உள்ளது”, என்றான். இப்படியாக ஒன்பது பாசுரம் மூலம் சரணம் புகத் தக்கவனுடைய விதங்கள் கூறி, பத்தாம் பாட்டில் சரணம் அடைகிறார்.

6-10-1. உலகம் உண்ட பெருவாயா உலப்பு இல் கீர்த்தி அம்மானே
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி நெடியாய் அடியேன் ஆர் உயிரே
திலதம் உலகுக்கு ஆய் நின்ற திருவேங்கடத்து எம் பெருமானே
குல தொல் அடியேன் உன பாதம் கூடும் ஆறு கூறாயே

பொருள் – ப்ரளய ஆபத்தில் இந்த லோகங்களை உட்கொண்டபோது, இவற்றைக் காப்பாற்றுதல் என்பது மட்டும் அல்லாமல், பெரும் பாரிப்பைக் கொண்டதாகிய, காப்பாற்றுதலுக்கு உறுப்பான உள்ள வாயைக் கொண்டவனே! காப்பாற்றுதல் மூலம் உண்டாவதும், எல்லையற்றதும் ஆகிய ஞானம், சக்தி போன்ற அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களுடைய ப்ரகாசத்தைக் கொண்டு, அனைத்திற்கும் இயல்பாகவே எஜமானனாக உள்ள ஸ்வரூபம் பொருந்தியவனே! இப்படிப்பட்ட காப்பாற்றுதல்களுக்கு ஏற்றதாக, உனக்கே உரியதான, இயல்பான ஸௌந்தர்யம் லாவண்யம் போன்ற பல குணங்களும் பரிபூர்ணமாக ஒளிரும்படியாக, இந்த உலகில் காணப்பட இயலாத ஒளி பொருந்திய திவ்யமங்கள திருமேனி கொண்டவனே! இவ்விதம் கூறப்பட்ட பலவிதமான சிறப்புகளையும் உடையவனாக உள்ள உனக்கு அடிமையாக உள்ள எனக்கு பரிபூர்ணமான உயிராக உள்ளவனே! இவ்விதம் திருமுகம் வெளிப்படுத்தாமல் நின்று காப்பாற்றுதல் மட்டும் அல்லாமல், அனைத்து லோகங்களுக்கும் ஊர்த்வபுண்ட்ர ரூபமாக நெற்றியில் அலங்கரிக்கவல்ல திலகம் போன்று, உறுதியாக நிற்கும் திருவேங்கடமலையில், எனக்கு உன்னுடைய எஜமானத் தன்மையைப் ப்ரகாசித்தபடி உள்ளவனே! தொன்று தொட்டு வரும் தொண்டர் குலத்தில் பிறந்த நான், எஜமானனாகவும் காப்பவனாகவும் க்ஷமை பொருந்தியவனாகவும் உள்ள உனது திருவடிகளை அடையும் விதத்தை நீயே அருளிச்செய்ய வேண்டும்.

அவதாரிகை - உன்னையொழிய வேறுகதி யின்றிக்கேயிருக்கிற என்னை உன் திருவடிகளிலே சேரும்படி பண்ணி யருளவேணுமென்கிறார்.

விளக்கம் – “உன்னைத் தவிர வேறு கதியற்றவனாகிய என்னை, உனது திருவடிகளில் சேரும்படியாகச் செய்து அருளவேண்டும்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (உலகமுண்ட பெருவாயா) தேவரீர் திருவடிகளைக் கிட்டாதவன்று எனக்கு உண்டான தளர்த்தி பத்து ப்ரளயாபத்தோபாதி போராதோ? ரக்ஷ்யத்தினளவன்றிக்கே யிருக்கும் பாரிப்பையுடையவனே! உன் பாரிப்புக்கும் என்னார்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு? நீயறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமே கைம்முதலாக ரக்ஷிக்குமவனன்றோ! ஒரு விபூதிக்காக ஆபத்துவரிலோ நோக்கலாவது! விபூதிக்காக வுண்டான ஆபத்து எனக்கு ஒருவனுக்குமுண்டானால்

நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலே யழுந்துவாரையோ நோக்கலாவது! ஸம்ஸாரார்ணவத்தில் அழுந்துவாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதாரையோ நோக்கலாவது! அபேக்ஷித்தார்க்கு உதவலாகாதோ? சரீரத்துக்கு வரும் ஆபத்தோ நோக்கலாவது! ஆத்மாவுக்கு வரும் ஆபத்து நோக்கலாகாதோ? ஜல ப்ரளயத்திலே அகப்படிலோ நோக்கலாவது! விரஹ ப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால் வரும் ஆபத்தோ நோக்கலாவது! உன்னால் வருமாபத்து நோக்கலாகாதோ? "சரணம் புகாதாரை ரக்ஷிக்க வேணும்" என்கிற நியதியுண்டோ! சரணம் புக்காரை ரக்ஷிக்கலாகாதோ? ரக்ஷித்துச் சமைந்து பின்னையும் "ஒன்றும் செய்யப் பெற்றிலோம்' என்றிருக்கக் கடவ உனக்கு, என்னுடைய ரக்ஷணத்திலேயந்வயியாதே கைவாங்கியிருக்கை போருமோ? ப்ரளயாபத்தை ரக்ஷித்துப் பின்பும் "நாம் இவற்றுக்குச் செய்தது ஒன்றுண்டோ?" என்று உடன்கிடந்தாரை மடி தடவி, பின்னை "என் செய்தோமானோம்" என்று தபிப்பாரைப்போலே இழவுபட்டிருப்பானொருவனன்றோ நீ!

விளக்கம் - (உலகமுண்ட பெருவாயா) - ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "ஜகத்திற்கு ப்ரளய ஆபத்து ஏற்பட்டது. அதனால் நாம் காப்பாற்றினோம். உமக்கு எந்த ஆபத்தும் இல்லையே!", என்றான். இதற்கு ஆழ்வார் ஸர்வேச்வரனிடம், "உனது திருவடிகளை அடைய இயலாதபோது, எனக்கு உண்டாகும் தளர்வு என்பது பத்து ப்ரளய ஆபத்துக்கள் போன்று உள்ளது போதாதோ? பாதுகாக்கப்படும் பொருள்களின் அளவு இன்றியே, அதிகமாக பாரிப்பு கொண்டவனே! உனது பாரிப்பிற்கும் எனது துன்பத்திற்கும் என்ன சேர்த்தி உள்ளது?", என்றார். இதற்கு ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "காக்கப்படும்போது ஒரு கைம்முதல் வேண்டாமோ?", என்றான்; இதற்கு விடை அளிக்கிறார்; எனக்கும் உனக்கும் உள்ள ஸம்பந்தம் மற்றும் எனக்கு ஏற்பட்ட ஆபத்து ஆகியவற்றைக் குறித்து நன்கு அறிந்த நீ, அவற்றையே எனது கைம்முதலாகக் கொண்டு காப்பாற்றுபவன் அல்லவோ? "பலருக்காக உதவுவதை விடுத்து, ஒருவருக்காக மட்டுமே இவ்விதம் செய்ய இயலுமோ?", என்று ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம் கேட்க, விடை தருகிறார்; ஒரு விபூதி முழுமைக்கும் ஆபத்து வந்தால் மட்டுமே நோக்குவாயா? விபூதிக்கு ஏற்படும் ஆபத்து, என் ஒருவனுக்கு உண்டானால் நோக்கவேண்டாமா? ஒரே ப்ரளயம் என்றபோதிலும், அதனைக் காட்டிலும் தனக்கு ஏற்பட்ட நிலையில் வேறுபாடு உண்டு என்பதை "ப்ரளய" என்ற இரண்டு வாக்கியங்களால் கூறுகிறார்;

ப்ரளய ஸமுத்ரத்தில் அழுந்துபவர்களை மட்டுமே நோக்க வேண்டுமா? ஸம்ஸார ஸமுத்ரத்தில் அழுந்துபவர்களை நோக்க வேண்டுமா? உன்னிடம் விண்ணப்பம் செய்யாதவர்களை நோக்கும்போது, உன்னிடம் விண்ணப்பம் செய்பவர்களுக்கு உதவினால் ஆகாதோ? ப்ரளய ஸமுத்ரத்தில் அழுந்துபவர்களுக்கு வந்த ஆபத்து என்ன, ஸம்ஸார ஸமுத்ரத்தில் அழுந்துபவர்களுக்கு வந்த ஆபத்து என்ன என்பதை அடுத்து கூறுகிறார்; சரீரத்திற்கு உண்டாகும் ஆபத்தை மட்டுமே நோக்கவேண்டுமோ, ஆத்மாவிற்கு உண்டாகும் ஆபத்தை நோக்கக்கூடாதோ? மேலும் ஒரு வேறுபாடும் கூறுகிறார்; நீரால் உண்டான ப்ரளயத்திலிருந்து மட்டுமே நோக்கவேண்டுமோ, விரஹம் என்ற ப்ரளயத்திலிருந்து காப்பாற்றலாகாதா? அதாவது மற்றவர்களால் உண்டாகும் ஆபத்துலிருந்து மட்டுமே காப்பாற்ற நோக்குவாயோ? உன்னால் ஏற்படும் ஆபத்தை நோக்கக் கூடாதோ? சரணம் புகாதவர்களை மட்டுமே காப்பாற்றவேண்டும் என்ற விதிமுறை ஏதும் உள்ளதா, சரணம் புகுந்தவர்களை ரக்ஷிக்கக்கூடாதா? அனைத்து உயிர்களையும் காப்பாற்றிய பின்னரும் உனது திருவுள்ளத்தில், “நான் ஒன்று செய்யவில்லையே” என்று உள்ளாய்; இப்படிப்பட்ட உனக்கு, என்னைக் காப்பாற்றுதலில் ஈடுபாடு காண்பிக்காமல் பொறுப்பிலிருந்து விலகி இருக்க இயலுமோ? “ஒன்றும் செய்யவில்லை” என்று இவன் இருந்த விதத்தை அடுத்து அருளிச்செய்கிறார்; “நாம் இவற்றுக்கு ஏதேனும் ஒன்று கூட செய்யவில்லை?” என்று ப்ரளய ஆபத்திலிருந்து காப்பாற்றிய பின்னர் நீ உள்ளாய்; அதாவது ஒருவருடைய மடியில் உள்ளதைத் திருடிக் கொண்டு சென்ற பின்னர், “என்ன கார்யம் செய்தோம்” என்று தவித்தபடி உள்ளவர்கள் போன்று, இழந்து நிற்பதாக நீ எண்ணியபடி உள்ளாய் அல்லவோ?

வ்யாக்யானம் - (பெருவாயா) ரக்ஷ்யத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பு இருக்கிறபடி. அவற்றின் பக்கலுண்டான ரக்ஷணத்தில் பாரிப்போபாதியும் போரும் தம்பக்கல் உபேக்ஷை யென்றிருக்கிறார். (பெருவாயா) த்ரௌபதி “சரணம்” என்ற உக்தி யித்தனையும் திருவுள்ளத்தே கிடந்து, ஸதஸ்ஸில் அவன் பரிபவித்த பரிபவத்தையும் பரிஹரித்து, துர்யோதநாதிகளையும் நிரஸித்து, தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவள் குழலையும் முடிப்பித்துப் பின்பும் “ருணம் ப்ரவ்ருத்தமிவமே” என்று குறைவாளனாய், பரமபதத்துக்கு எழுந்தருளுகிறபோதும் “நாதிஸ்வஸ்த்தமநா:” என்று திருவுள்ளத்தில் புண்ணோடேயிறே யெழுந்தருளிற்று.

விளக்கம் – (பெருவாயா) - வ்யாக்யானத்தில் உள்ள “ரக்ஷித்து சமைந்து - காப்பாற்றிய பின்னரும்” என்பது மூலம் கூறப்பட்ட பொருளானது “பெருவாயா” என்பதைக் கருத்தில் கொண்டே ஆகும் என்பதை வெளிப்படுத்த, மீண்டும் அந்தச் சொல்லை விளக்குகிறார். தன்னால் பாதுகாக்கப்படும் பொருள்களின் அளவைக் காட்டிலும், காப்பவனுடைய பாரிப்பு அதிகமாக உள்ளது. அவற்றின் மீது உண்டான காப்பாற்றுதலில் உள்ள பாரிப்பு போன்று தன்னிடம் உதாஸீனமாக உள்ளதாக எண்ணுகிறார். (பெருவயா) - காப்பாற்றிய பின்னரும் “ஒன்றும் செய்யவில்லை” என்றுள்ள தன்மைக்கு ஒரு உதாரணம் கூறுகிறார்; இதற்காக மீண்டும் “பெருவாயா” என்பதை எடுக்கிறார். த்ரௌபதி “சரணம்” என்று கூறிய சொற்கள் இவன் செவியில் எப்போதும் கிடந்தன; ஆகவே, சபையில் துச்சாதனன் செய்த மானபங்கத்தையும் விலக்கி, துர்யோதனன் போன்றவர்களை அழித்து, தர்மபுத்திரன் தலையில் முடியை வைத்து, த்ரௌபதியின் அவிழ்ந்த கூந்தலை முடியும்படியாச் செய்து, அதன் பின்னரும், மஹாபாரதம் உத்யோகபர்வம் (58-22) - ருணம் ப்ரவ்ருத்தமிவமே – கடன் போன்று வளர்ந்தபடியே இருந்தது - என்று த்ரௌபதியின் கூக்குரலை எண்ணி, குறை நிறைந்தவனாகவே இருந்தான்; இதன் விளைவாக, பரமபதத்திற்கு மீண்டும் திரும்பிய நேரத்திலும், “நாதிஸ்வஸ்த்தமநா: - நிம்மதி அற்ற மனம் கொண்டவனாக” என்பதற்கு ஏற்ப, திருவுள்ளத்தில் புண்பட்ட நிலையில் எழுந்தருளினான்.

வ்யாக்யானம் - (உலப்பில் கீர்த்தியம்மானே) இவனுக்கு ரக்ஷகத்வம் வந்தேறியாய்ப் போய், பழையது கொண்டு வளைப்பிடுகிறேனல்லேன்; இப்படி லோகத்தை ரக்ஷித்து ஆர்ஜித்த புகழுக்கு முடிவில்லையென்கிறது. “பொழிலேழும் காவல் பூண்ட புகழி”தே. இப்படிகளால் வந்த குணவத்தா ப்ரதையையுடைய ஸர்வேச்வரனே! “தஸ்யநாம மஹத்யச:” என்றும், “யசஸச்சைக பாஜநம்” என்றும் உபதேசகம்யமன்றிக்கே, “விதித:” என்று சத்ரு கோஷ்ட்டியிலும் இப்படி ப்ரஸித்தமாயன்றோ உன் புகழிருப்பது! பாதகத்தின் ஸந்நிதியிலே பாத்யமும் ஜீவிக்கும்படியன்றோ உன்னுடைய ஆஜ்ஞையிருப்பது! அவன் நினைத்தவன்று பாதகந்தானே பாத்யத்துக்குப் பாலூட்டி வளராநிற்குமிறே.

விளக்கம் - (உலப்பில் கீர்த்தியம்மானே) – இவனுடைய காப்பாற்றும் தன்மையானது, இடையில் வந்து சேர்ந்து, பின்னர் மறைந்து, அதன் விளைவாக முன்பு செய்தவற்றை எண்ணி இப்போது கூறுகிறேன் அல்லன். இவ்விதம்

லோகத்தைக் காப்பாற்றுதல் என்பது ஒரு காலத்தில் மட்டுமே அல்லாமல் எப்போதும் இருந்தபடி உள்ளது. ஆகவே இவ்விதம் எப்போதும் காப்பாற்றி நிற்பதன் மூலம் சேர்ந்த புகழுக்கு ஒரு முடிவே இல்லை; இதற்கு ப்ரமாணம் திருநெடுந்தாண்டகம் (10) - பொழிலேழும் காவல் பூண்ட புகழ் – என்பதாகும். இப்படியாக ஆபத்து காலங்களில் துணையாக இருத்தல் போன்ற குணங்கள் கொண்டுள்ளதால் ஏற்பட்ட ப்ரஸித்தி கொண்ட ஸர்வேச்வரனே! இதற்கான ப்ரமாணங்களைக் கூறுகிறார். கிஷ்கிந்தாகாண்டத்தில் வாலியிடம் தாரை கூறுவது (15-19) - தஸ்யநாம மஹத்யச: – அந்தப் பரமாத்மாவின் கீர்த்தி மிகவும் பெரியது - என்றும், (15-19) – யசஸச்சைக பாஜநம் - புகழுக்கு தானே இருப்பிடமாக உள்ளவன் - என்றும் உபதேசம் மூலம் மட்டுமே அறியலாம்படி இன்றி, பகைவர்கள் கூட்டத்திலும் உனது புகழ் பரவியுள்ளது அல்லவோ; இதற்கு ப்ரமாணம் ஸுந்தரகாண்டம் (21-20) – விதித: - அனைவராலும் அறியப்பட்டவர் - என்பது ஆகும். அடுத்து, காப்பாற்றுதல் என்பதன் எல்லையைக் கூறுகிறார்; பாதிக்கும் கருடனின் அருகாமையில் பாதிக்கப்படும் சுமுகனும் உள்ளதாக அல்லவோ உனது ஆணை இருக்கிறது! அவன் நினைத்தால், பாதிக்கும் பொருளானது, தானே பாதிக்கப்படும் பொருளையும் பால் ஊட்டி வளர்ப்பது போன்று காப்பாற்றும்.

வ்யாக்யானம் - (உலப்பில் கீர்த்தியம்மானே) "குணாநாமாகரோ மஹாந்" என்றும், "ததா குணாஹ்யநந்தஸ்ய" என்றும், "வர்ஷாயுதைர்யஸ்ய குணா ந சக்யா:" என்றும், "பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்திதே" என்றும் சொல்லுகிற குணங்களுக்கு முடிவின்றிக்கேயிருக்கை. இவற்றை எல்லை காண நினைத்தால் கரைகண்டு மீளவொண்ணாது; மதி க்ஷயத்தாலே மீளுமத்தனை. ஸ்வரூபமொழிய குணத்துக்காயிற்றுத் தோற்றது.

விளக்கம் – (உலப்பில் கீர்த்தியம்மானே) - கிஷ்கிந்தாகாண்டம் (15-21) - குணாநாமாகரோ மஹாந் - அனைத்து குணங்களுக்கும் நிலையுமாக உள்ளவன் – என்றும், மத்ஸ்ய புராணம் – ததா குணாஹ்யநந்தஸ்ய - அவனுடைய குணங்கள் எண்ணற்றவை - என்றும், மஹாபாரதம் கர்ணபர்வம் - வர்ஷாயுதைர்யஸ்ய குணா ந சக்யா: - க்ருஷ்ணனுடைய குணங்க்ளை அனைத்து லோகங்களும் சேர்ந்து நின்று பதினாயிரம் ஆண்டுகள் கூறினாலும் முடியாது – என்றும், அயோத்யாகாண்டம் (2-26) - பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்திதே - அரசனே! உனது

புத்திரனாகிய இராமனுக்கு அனைத்து கல்யாண குணங்களும் நிறைந்துள்ளன - என்றும் கூறப்படும் குணங்களுக்கு முடிவு இல்லாமல் உள்ளது. எல்லை காண முயன்றாலும், கரை காண இயலாது; அறிவு குறைவு காரணமாகத் திரும்ப வேண்டியதாக இருக்கும். இவனுடைய ஸ்வரூபத்திற்கு அல்லாமல் குணங்களுக்கு அல்லவோ ஆழ்வார் தோற்றார்?

வ்யாக்யானம் - (நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி) ரக்ஷகனன்றிக்கே காதுகனானாலும் விடவொண்ணாத வடிவழகிருக்கிறபடி. (நிலவும்) ஒரு கர்மமடியாக வந்து, அது வற்ற வற்றுகிறதன்றே. (சுடர் சூழொளி மூர்த்தி) உள்ளு மண்பற்றாய்ப் புறம்பு ஒளியூட்டி யிருக்கை யன்றிக்கே, "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்" என்கிறபடியே, தேஜ பதார்த்தங்களைத் திரட்டிப் பிடித்தாற்போலே யிருக்கை. "உயர்வினையே தருமொண்சுடர்க்கற்றை" என்னக் கடவதிறே. ரஜஸ் தமஸ்ஸுக்களா லளாவனன்றிக்கே சுத்தஸத்த்வமயமாய் நிரவதிக தேஜோ ரூபமாய், நெய் திணுங்கினாற்போலே உள்ளும் புறம்பும் ஒக்க ஒளியேயா யிருக்கை. திருமேனி தன்னை "பஞ்ச சக்தி மயம்" என்றும் சொல்லாநின்றார்கள்; "ஷாட்குண்ய விக்ரஹம்" என்றும் சொல்லா நின்றார்கள்; ஆராய்ந்து பார்த்தால், அர்த்தஸ்த்தித்தான் பஞ்சசக்திமயமென்றே யிருக்கும்; ஷாட்குண்ய விக்ரஹமென்கிறது திருமேனிதான் குணங்களுக்குத் திரோதாயகமன்றிக்கே ப்ரகாசகமாயிருக்கையாலே. "ரூபவாந் ஸுபகஸ் ஸ்ரீமாந் கந்தர்ப்ப இவ மூர்த்திமாந்" என்றும், "தாஸாமாவிரபூத்" என்றும் சொல்லுகிறபடியேயிறே யிருப்பது.

விளக்கம் – (நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி) - கடந்த வரியின் மூலம், பாதுகாக்கும் தன்மை கூறுகிறார்; அந்தத் தன்மை இல்லை என்றாலும், அவனுடைய வடிவழகு, நம்மால் அவனை விட இயலாதபடிச் செய்யும் என்கிறார்; ரக்ஷகனாக இல்லை என்றாலும், அவன் பாதிப்பை ஏற்படுத்துபவன் என்றாலும், விட இயலாதபடி வடிவழகு உள்ளது. (நிலவும்) - இந்த வடிவழகானது ஏதோ ஒரு கர்மம் காரணமாக வந்து சேர்ந்து, அந்தக் கர்மம் வற்றும்போது, வடிவழகும் மாறும்படியான நிலை என்பது இவனுக்கு இல்லை; கர்மத்தால் வந்தது அல்ல. (சுடர் சூழொளி மூர்த்தி) – "சுடர், ஒளி" என்று ஒரே பொருள் தரும் இரண்டு சொற்களைக் கூறியதை விளக்குகிறார்; உள்பக்கம் முழுவதும் மண்ணாகவும், வெளிப்பக்கம் மட்டும் ஒளியைக் காண்பிக்கும் பொம்மைகள் போன்று அல்லாமல், "தேஜஸாம்

ராசிமூர்ஜிதம் - ஒளிகளின் கூட்டம்” என்று கூறலாம்படி, அனைத்து ஒளி வீசும் பொருள்களையும் ஒன்றாகத் திரட்டிப் பிடித்தது போன்று உள்ளான். திருவாய்மொழி (1-7-4) - உயர்வினையே தருமொண்சுடர்க்கற்றை - என்பது காண்க. “உள்ளு மண்பற்று” என்பதை விளக்குகிறார். ரஜஸ் மற்றும் தமஸ் கலந்தது அல்லாமல் சுத்தஸத்வமாக, எல்லையற்ற தேஜஸ் நிறைந்ததாக, நெய் உருகியது போன்று, உள்ளும் புறமும் ஒரே போன்று ஒளி ரூபமாக உள்ளதைக் கூறுகிறார். இது சுத்தஸத்வமயமான திருமேனி என்பதால், பஞ்சோபநிஷந்மயம் என்பதாகவும் கொண்டு, “ஷாட்குண்ய விக்ரஹம்” என்று கூறலாம்படி உள்ளபோது, “பஞ்சோபநிஷந்மயம்” என்று கூறுவது ஏன் என்பதை விளக்குகிறார். இவனுடைய திருமேனியை “பஞ்ச சக்திமயம்” என்று கூறுவர்; “பஞ்ச சக்தி” என்பது இந்த உலகில் காணப்படாத ஐந்து பூதங்கள் ஆகும். அல்லது “ஷாட்குண்ய சக்தி மயம்” என்றும் கூறுவார்கள். நன்கு ஆராய்ந்து பார்த்தால், பொருளின் நிலை “பஞ்ச சக்தி மயம்” என்பதாகவே இருக்கும்; “ஷாட்குண்ய விக்ரஹம்” என்றது, திருமேனியானது அவன் குணங்களை மறைப்பது மட்டும் அல்லாமல், அவற்றை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது என்பதால் ஆகும். “சுடர், ஒளி” என்பதற்கு, இதற்கு முன்பாக ஒரு பொருளை அருளிச்செய்தார்; அதாவது இரண்டும் சேர்ந்து ஒரே பொருளைக் குறிப்பதாக உரைத்தார், இங்கு அவற்றை வெவ்வேறு சொற்களாகக் கொண்டு, அழகு மற்றும் லாவண்யம் என்பதாகப் பொருள் கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (34-30) - ரூபவாந் ஸுபகஸ் ஸ்ரீமாந் கந்தர்ப்ப இவ மூர்த்திமாந் - மன்மதனைப் போன்று அழகான வடிவமும், கவரக் கூடிய காந்தியும் உடையவன் - என்றும், ஸ்ரீமத்பாகவதம் (10-32-2) - தாஸாமாவிரபூத் - மன்மதனுக்கும் மன்மதனாக உள்ள க்ருஷ்ணன் அந்த கோபிகைகளுக்கு நடுவில் தோன்றினான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப திருமேனி உள்ளது.

வ்யாக்யானம் - (நெடியாய்) கீழ்ச்சொன்ன குணங்களுக்கு எல்லையுண்டானாலும், ஸௌந்தர்ய லாவண்யாதிகளுக்கு எல்லை காணவொண்ணாதபடியா யிருக்கை. “மஹாந்” என்கிறபடியே, தொட்ட தொட்ட துறைதோறும் தரைகாண வொண்ணாதிருக்கிறபடி. (அடியேனாருயிரே) வடிவழகையும் குணங்களையுங் காட்டி, என்னை வ்யதிரேகத்தில் ஜீவியாதபடி பண்ணினவனே! “திருவேங்கடத்தெம்பெருமானே” என்றத்தோடொக்க இத்தைக் கூட்டக் கடவது. (திலதமுலகுக்காய் நின்ற) சில ஸ்த்ரீகளுக்குப் பூர்ணமான ஆபரணம் போலாயிற்று

பூமிக்குத் திருமலை. (திருவேங்கடத்தெம்பெருமானே அடியேனாருயிரே) திருமலையிலே நின்று என்னுடைய சேஷத்வ முறையை யறிவித்து, உன்னாலல்லது செல்லாதபடி பண்ணினவனே!

விளக்கம் – (நெடியாய்) - இதுவரை கூறப்பட்ட குணங்களுக்கு ஒரு எல்லை உள்ளது என்று கூறினாலும் கூட, அழகு மற்றும் லாவண்யம் ஆகியவற்றுக்கு எல்லை காண இயலாதபடி உள்ளது. ஆனால் மேலே கூறப்பட்ட ஆத்ம குணங்கள் இருக்குமோ என்பதற்கு விடை அருளிச் செய்கிறார், "மஹாந்" என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு தன்மையும், எல்லையும் ஆழமும் காண முடியாதபடி இருக்கும். (அடியேன் ஆருயிரே) - வடிவழகையும் குணங்களையும் காண்பித்து, உன்னை விட்டுப் பிரிந்தால் நான் உயிர் வாழமாட்டாதபடி செய்தவனே! "அடியேன் ஆருயிரே" என்பதுடன் "திருவேங்கடத்து எம்பெருமானே" என்பதையும் சேர்க்கவேண்டும். (திலதம் உலகுக்காய் நின்ற) - சில பெண்களுக்கு பூர்ணமான ஆபரணம் போன்று இந்தப் பூமிக்குத் திருவேங்கடத் திருமலை உள்ளது. (திருவேங்கடத்தெம்பெருமானே அடியேனாருயிரே) – திருவேங்கடத்தில் நின்றபடி, எனக்கு எனது கைங்கர்ய முறையை உணர்த்தி, உனக்கு அல்லாது வேறு எங்கும் செல்லாதபடிச் செய்தவனே!

வ்யாக்யானம் - இவ்வளவும் வர, அவன் ஸ்வரூபம் சொன்னார்; மேல், தம் ஸ்வரூபஞ் சொல்லுகிறார்; (குலதொலடியேன்) குலமாகப் பழையதான அடியேன். இத்தால், தமக்கு ஓர் ஆதிக்யஞ் சொல்லுகிறாரல்லர்; தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிறார். ஒருவற்கேயா யிருப்பாரை வேறு சிலர் நோக்குவாரில்லையிறே. (உன பாதம் கூடுமாறு கூறாயே) ஸ்வரூபம் இதுவான பின்பு, ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பெறும்படி பண்ணியருளாய். (அடியேனுனபாதம் கூடுமாறு) சேஷபூதனானவன் உன்னைக்கூட என்னுமது "உனபாதம் கூட" என்றிறே. (உனபாதம் கூடுமாறு) இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. (கூறாயே) ஒரு சொல் உனக்கு, எனக்கு ஸ்வரூப லாபங் கிடாய். அவன் ஒரு வார்த்தையருளிச் செய்ய, தளப்பம் தீருமிறே இவர்க்கு. "மா சுச:" என்ன வேணும்.

விளக்கம் – இதுவரை திருவேங்கடமுடையானுடைய ஸ்வருபம் கூறினார்; இனி தனது ஸ்வரூபத்தைக் கூறுகிறார். (குலதொலடியேன்) - குலம் என்பது பழையதாக உள்ள அடியேன். இதன் மூலம் தனது உயர்வையும் தகுதியையும் கூறிக்

கொள்ளவில்லை; மாறாக, தன்னுடைய “வேறு கதியில்லாத நிலை” என்பதைக் கூறுகிறார். ஆனால் “குலதொல் அடியேன்” என்பதன் மூலம் “வேறு கதி இன்மை” என்பது வெளிப்படுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஒவ்வொருவர்க்கு மட்டுமே என்று உள்ளவர்கள், வேறு யாரையும் நோக்குவதில்லை அல்லவோ? (உன பாதம் கூடுமாறு கூறாயே) - எனது ஸ்வரூபமனாது உனக்கே அடிமையாக இருத்தல் என்றுள்ளபோது, அந்த ஸ்வரூபத்திற்கு ஏற்ற பேறாகிய கைங்கர்யத்தைப் பெறும்படியாகக் செய்தருளாய். (அடியேனுனபாதம் கூடுமாறு) - “உன்னைக் கூறுமாறு” என்று உரைக்காமல் “உன பாதம் கூறுமாறு” என்று ஏன் கூறினார்; அடியவனாகிய நான் “உன்னைக் கூட” என்னும்போது “உன் பாதம் கூட” என்று பொருள் அல்லவோ? “பெறுமாறு” என்று கூறாமல் “கூறுமாறு” என்று ஏன் கூறவேண்டும்? இவருடைய மோக்ஷம் உள்ள விதம் காரணமாக ஆகும். (கூறாயே) - உனக்கு ஒரு சொல் கூறினாலே போதுமானது; ஆனால் அந்த ஒரு சொல்லே எனது ஸ்வருபத்தை நான் அடையும்படிச் செய்யும். அவன் ஒரு வார்த்தை அருளிச்செய்தாலே இவர்க்கு அனைத்து துக்கங்களும் விலகும். அந்த வார்த்தை என்ன என்பதை கூறுகிறார்; கீதை (18-66) – மா சுச: - வருத்தம் கொள்ளாதே - என்பதாகும்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 10)

1-2-4. உழந்தாள் நறு நெய் ஒரோர் தடா உண்ண
இழந்தாள் எரிவினால் ஈர்த்து எழில் மத்தின்
பழந் தாம்பால் ஓச்சப் பயத்தால் தவழ்ந்தான்
முழந்தாள் இருந்தவா காணீரே முகிழ் முலையீர் வந்து காணீரே

பொருள் - களைத்துத் தடாவில் சேர்த்த யசோதையின் நறுமணம் மிக்க நெய்யை, ஒவ்வொரு தடாவாக உண்ண, "பிள்ளையை இழந்துவிட்டோமே" என்று நினைத்தவளாக, வயிறு எரிய, க்ருஷ்ணனின் கையைப் பிடித்து இழுத்து, அழகிய மத்தில் வெகு காலம் பழகின கயிற்றாலே அடிப்பதாக ஓங்க, பயந்து தப்பிப் பிழைக்க தவழ்ந்தவனுடைய முழங்கால்களின் அழகினைக் காணுங்கள், வளர்ந்த முலைகளை உடைய பெண்களே, நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருக்கணைக்காலை அநுபவித்த வநந்தரம் திருமுழந்தாளை அநுபவிக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (உழந்தித்யாதி) ஆயாஸித்துக் கடைந்து ஒரோ தடாக்களிலே சேர்த்து வைத்த நெய்யை உண்ணக் கண்டு, "உண்ட நெய் பிள்ளைக்கு ஸாத்மியாது" என்று பிள்ளையை இழந்தாளாக நினைத்து பயப்பட்ட உழற்றியாலே. "ஈர்த்து" என்றது இழுத்தென்றபடி. "எழில் மத்து" என்று எயிறு

விளங்காநின்ற மத்தென்றபடி. மத்திலே சுற்றிக் கடைந்த பழந்தாம்பாலென்றபடி. நல்ல தாம்பு தேடும்போது இவனை விடவேணுமே. அத்தாலே, கண்டதோர் கயிற்றை எடுக்கையிறே உள்ளது. தாம்பாலே ஓங்கினவளவிலே அடித்தாளாக நினைத்து பயத்தாலே தவிழப் புகுந்தவாறே கோபத்தை மறந்து "தவழ்ந்தான்". "தவழ்ந்தான்" என்று தவழ்ந்து கன்றின பின்னே போன முழந்தாளை வெறும்புறத்திலே அவள் அநுபவித்த ப்ரகாரத்தை தாமும் அநுபவித்து அநுபவ யோக்யரைக் "காணீர்" "காணீர்" என்று காட்டுகிறார். (முகிழ் முலையீர்) பக்த்யங்குரம்.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருக்கணைக்காலி னழகை யநுபவித்த வநந்தரம், திருமுழந்தாளினழகை யநுபவிக்கிறார்.

விளக்கம் – திருக்கணைக்காலின் அழகை அனுபவித்த பின்னர் திருமுழங்காலின் அழகை அனுபவிக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (உழந்தாள்) ஆயாஸித்தவள். கறந்து காய்ச்சித் தோய்த்துக் கடைந்து வெண்ணெயாக்கி உருக்கித் தடாக்களிலே சேர்த்து வைத்த வருத்தத்தையெல்லாம் சொல்லுகிறது. (நறு நெய் ஓரோ தடாவுண்ண) நறுவிதான நெய்யை ஒவ்வொரு தடாவாக ஒன்றும் சேஷியாதபடி உண்ண. (இழந்தாள் எரிவினால் ஈர்த்து) "உண்ட நெய் பிள்ளைக்கு ஸாத்மியாது" என்று பிள்ளையை இழந்தாளாக நினைத்து பயப்படுகையால் வந்த வயிற்றெரிச்சலாலே கையைப் பிடித்திழுத்து. (எழில் மத்தின் பழந்தாம்பாலோச்ச) அழகிய மத்திலே சுற்றிக் கடைந்து பழகின தாம்பாலே அடிப்பதாக ஓங்க. (பயத்தால் தவழ்ந்தான்). பயத்தாலே அத்தைத் தப்புவதாகத் தவழ்ந்தவனுடைய, (முழந்தாளிருந்தவா காணீரே) திருமுழந்தாளினழகிருந்தபடியைக் காணுங்கோள். (முகிழ் முலையீர் வந்து காணீரே) முகிழ்த்த முலையையுடையீர் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (உழந்தான்) - களைப்புற்றவள். பாலினைக் கறந்து காய்ச்சித் தோய்த்துக் கடைந்து வெண்ணெயாக்கி உருக்கித் தடாக்களில் சேர்ந்து வைத்து, இப்படியாக உடல் வருத்தச் செய்து களைப்பு அடைந்துள்ளாள். (நறுநெய் ஓரோ தடா உண்ண) - இவ்வாறு களைப்பு அடைய ஒவ்வொரு தடா நிறையச் சேர்த்து வைத்த நறுமணம் மிக்க நெய்யினை, ஒவ்வொரு தடாவாக ஒன்றும் மிச்சமில்லாதபடிக்கு உண்ண. (இழந்தாள் எரிவினால் ஈர்த்து) – "உண்ட நெய்யானது பிள்ளைக்கு ஜீரணம் ஆகாது. பிள்ளையை இழந்தேனே" என்று

இழந்தவளாக நினைத்து, அச்சம் கொண்டதால் வந்த வயிறு எரிச்சலாலே, க்ருஷ்ணனின் கையைப் பிடித்து இழுத்து. (எழில் மத்தின் பழந் தாம்பாலே) - இவள் கைப்பட்ட மத்து ஆகையாலே அழகான மத்தானது. இந்த அழகான மத்திலே சுற்றிக் கடைய உதவி செய்வதும், வெகுநாட்களாகக் கடையப் பழகின கயிற்றினாலே. ஏன் மத்தில் சுற்றியிருந்த பழையதான கயிற்றினைக் கையில் எடுத்தாள்? நல்லதான கயிற்றினை கையில் எடுத்து இருக்கலாமே என்றால், நல்லதான கயிற்றினைத் தேடும்பொழுதில் இவன் தப்பி ஓடிவிடுவான்; ஆகவே, கண்ணில் கண்ட ஒரு கயிற்றைக் கையில் எடுத்தாள். எடுத்த அந்தக் கயிற்றினாலே, (ஓச்ச பயத்தால் தவந்தான்) - அடிப்பதாக ஓங்க, அடித்தே விட்டாள் என்று நினைத்து, பயத்தாலே தவழ்ந்து தப்பிப் பிழைக்கும் அழகினைக் கண்டு கோபத்தை மறந்தவளாய், "தவழ்ந்தான்", "தவழ்ந்தான்" என்று கன்றின் பின்னே தவழ்ந்து போன முழங்காலினைக் கண்டு. (முழந்தாள் இருந்த ஆ காணீரே) - இந்த முழங்காலின் அழகினை வந்து காணுங்கள் (முகிழ்முலையீர் வந்து காணீரே) - க்ருஷ்ணன் மீதுள்ள அன்பானது மொட்டு போன்று வளர்ந்துள்ள முலைகளை உடைய பெண்களே வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்